**LS25**

# Impact of School's Environment on Promoting Reading Habits among School Students – A Study Based on Jaffna Educational Zone.

## பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழலின் தாக்கங்கள் -யாழ்ப்பாணக் கல்வி வலயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

Sivamathy Thirumaran[1], A.Sathiaseelan[2]


## ABSTRACT

Libraries in the school support us to motivate education and develop us to the top level without any discrimination in relation to race and language. It motivates the students to change their habits and improve the reading skills, thinking pattern, research abilities and skills for debates. The purpose of this research is to identify the impact of schools' environment on promoting reading habits among the school students. The objective of this study is to know the position of the schools' administration, subject teachers, teacher in charge of library, and library within the school in influencing students' reading habits. The study employs area research methods considering 1AB schools (n=16) among all schools (n=114) in Jaffna Education Zone which is one of the five education zones in the Jaffna District. 10% students (n=402) among the students (n=4017) in these schools were randomly selected for this research. 10% teachers (n=48) who teach these students and teacher in charge of the library (n=16) of these schools are also included in this sample. Data collection methods include issuing questionnaire to the students, subject teachers and teacher in charge of the library and interviews with librarians in charge at the schools, subject teachers and the parents of the students (n=245). In addition, school library activities and library records were observed to collect the data from 16 schools. The data analyses include percentage analysis, correlation coefficient and graphs by using SPSS. The findings of this study reveal that lack of interest of the teachers, lack of corporation of the schools' administration, lack of guidance given by the teacher in charge of the library, lack of human resource and physical resources of the library influence reading habits of the students in the school environment.


***Keywords:*** *Reading habits, School Library, School Environment*


**ஆய்வுச் சுருக்கம்**

இன, மத, மொழி பேதமின்றி கல்வியை ஊக்குவிக்க, உச்சநிலைக்கு எம்மை வளரச் செய்ய பாடசாலை நூலகங்கள் மிக உறுதுணையாகவுள்ளன. மாணவச் செல்வங்கள் மத்தியிலே பழக்கவழக்கங்கள், வாசிப்புத்திறன், சிந்தனைவெளிப்பாடு, ஆய்வுத்திறன், விவாதத்திறன் என்பனவற்றை ஊக்குவிக்கின்றன. பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழல் எவ்வகையான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதை இனங்காணலே இவ் ஆய்வின் நோக்கமாகும். பாடசாலை நூலகத்தில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பின்புலமான பாடசாலைச்சூழலினுள் உட்படுகின்ற பாடசாலை நிர்வாகம், பாட ஆசிரியர்கள், நூலகப்


[1] Hindu Ladies College, Jaffna, Sri Lanka, Corresponding author: sthirumaran71@gmail.com
[2] Deapartment of Education, Faculty of Arts, University of Jaffna

பொறுப்பாசிரியர், நூலகம் எவ்வகையான நிலையில் உள்ளன என்பதனை அறிதல் இவ் ஆய்வின் குறிக்கோளாக அமைகின்றது. இவ்வாய்வானது பரப்பளவு ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டதோடு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் ஒன்றான யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் (n=114) 1AB தரத்திலான அனைத்து பாடசாலைகளும் (n=16) ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் (n=4017) 10% மான மாணவர்கள் (n=402) ஆய்வுக்காக எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டனர். இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களில் 10% (n=48) ஆன ஆசிரியர்களும் இப் பாடசாலையின் (n=16) நூலகப் பொறுப்பாசிரியர்களும் ஆய்வு மாதிரியில் உள்ளடக்கப்பட்டனர். மாணவர்கள், பாட ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாசிரியர்களுக்கு வினாக்கொத்தினை வழங்கியும், நூலகப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களுடனும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் குறிப்பிட்ட பெற்றோர்களுடன் (n=245) கலந்துரையாடல் செய்ததன் மூலமும், 16 பாடசாலை நூலகச் செயற்பாடுகள், நூலகப் பதிவேட்டு ஆவணங்கள் என்பவற்றை அவதானித்ததன் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்களும் தரவுகளும் புள்ளிவிபரவியல் மூலம் SPSS Package பயன்படுத்தி நூற்று வீதம், வரைபுகள், இணைவுக்குணகம் என்பவற்றின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழல் எவ்வகையான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதை நோக்குகின்ற போது பாட ஆசிரியரானவர் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதில் அக்கறையில்லாத தன்மையும் பாடசாலை நிர்வாகம் ஒத்துழைக்காத தன்மையும் நூலகப் பொறுப்பாசிரியர் மாணவரின் சுதந்திரமான வாசிப்புக்கு வழிகாட்டாத தன்மையும் பாடசாலை நூலகச் சேவைகள் சீரற்ற நிலைமையிலும் காணப்படுவதோடு பாடசாலை நூலக மனித வள, பௌதீக வள கிடைப்பனவு பற்றாக்குறையான நிலைமையும் காணப்படுகின்ற நிலையில் பாடசாலைச் சூழல் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *வாசிப்புப் பழக்கம். பாடசாலை நூலகம். பாடசாலைச் சூழல்*

## அறிமுகம்

இந்த நூற்றாண்டு அறிவு மைய நூற்றாண்டு வாழ்க்கை முழுவதும் கல்வி என்பது தவிர்க்கவியலாத நியதியாகி விட்டது. கல்வி நிலையங்களிலே கற்பதைக் கொண்டு வாழ்க்கையை மேம்படுத்தி விட முடியாது. எனவே ஒவ்வொருவரும் தாமாகக் கற்க வேண்டிய தேவையிருக்கிறது. சுயமாகக் கற்பதற்குப் பெரிதும் உதவக் கூடியது வாசிப்புப் பழக்கமே எனலாம். எனவே வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவத்தினையும் வாசிப்புப் பழக்கத்தின் இன்றைய நிலையினையும் வாசிப்பு பழக்கத்தினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் அறிந்து கொள்வதற்கான முயற்சிகளும் அதிகளவில் தேவையாகவுள்ளது.

## நோக்கமும் குறிக்கோள்களும்

### ஆய்வு நோக்கம்

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழல் எவ்வகையான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதை இனங்காணலே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

### ஆய்வுக் குறிக்கோள்கள்

பாடசாலை நூலகத்தில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பின்புலமான பாடசாலைச்சூழலினுள் உட்படுகின்ற பாடசாலை நிர்வாகம், பாட ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாசிரியர், நூலகம் எவ்வகையான நிலையில் உள்ளன என்பதனை அறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது, பரப்பளவு ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் ஒன்றான யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் (n=114) 1AB தரத்திலான அனைத்து பாடசாலைகளும் (n=16) ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதனுள் 3 தனியார் பாடசாலைகளும் 4 தேசிய பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் (n=4017) 10% மான மாணவர்கள் (n=402) ஆய்வுக்காக எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டனர்.

அட்டவணை 1: மாணவர்களின் மொத்த எண்ணிக்கையும் மாதிரியும்

| க.பொ.த. உயர்தரத் துறைகள் | ஆண்கள் | | பெண்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | மாதிரி 10% | தொகை | மாதிரி 10% | தொகை | மாதிரி 10% |
| கணிதம் | 438 | 44 | 263 | 26 | 701 | 70 |
| விஞ்ஞானம் | 205 | 20 | 407 | 41 | 612 | 61 |
| வர்த்தகம் | 415 | 41 | 446 | 45 | 861 | 86 |
| கலை | 498 | 50 | 798 | 80 | 1296 | 130 |
| தொழில்நுட்பம் | 339 | 34 | 208 | 21 | 547 | 55 |
| மொத்தம் | 1895 | 189 | 2122 | 213 | 4017 | 402 |

(மூலம்: யாழ்ப்பாணக் கல்வி வலயப் புள்ளி விபரப் பதிவேடு – 2016)

இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களில் 10% (n=48) ஆன ஆசிரியர்களும் இப் பாடசாலையின் (n=16) நூலகப் பொறுப்பாசிரியர்களும் ஆய்வுக்குடித்தொகையில் உள்ளடக்கப்பட்டனர். மாணவர்கள், பாட ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாசிரியர்களுக்கு வினாக்கொத்தினை வழங்கியும், நூலகப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களுடனும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் குறிப்பிட்ட பெற்றோர்களுடன் (n=245) கலந்துரையாடல் செய்வதன் மூலமும், 16 பாடசாலை நூலகச் செயற்பாடுகள், நூலகப் பதிவேட்டு ஆவணங்கள் என்பவற்றை அவதானிப்பதன் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இவ் வினாக்கொத்துக்களில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாட ஆசிரியர்களின் ஈடுபாடு, பாடசாலை நிர்வாக ஒத்துழைப்பு, நூலகப் பொறுப்பாசிரியரின் தூண்டல் நிலை, பாடசாலை நூலக சேவைகள், பாடசாலை நூலக வளக்கிடைப்பனவு நிலை என்பவற்றை அறியக்கூடியவாறான வினாக்கள் உள்ளடக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்களும் தரவுகளும் புள்ளிவிபரவியல் மூலம் SPSS Package பயன்படுத்தி நூற்று வீதம், வரைபுகள், இணைவுக்குணகம் என்பவற்றின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

**ஆய்வுப் பெறுபேறுகளும் ஆலோசனைகளும்**

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் தாக்கம் செலுத்துகின்ற நூலகப் பொறுப்பாசிரியர்கள் 100% (n=16) இனரிடமும் பாட ஆசிரியர்கள் 100% (n=48) இனரிடமும் மாணவர்கள் 98% (n=392) இனரிடமும் வினாக் கொத்துக்கள் மீளப்பெறப்பட்டன. கலந்துரையாடல்கள்இ அவதானம்இ வினாக்கொத்துகளிலிருந்தும் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் க.பொ.த உயர்தர மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழல் எவ்வகையான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதை பின்வருமாறு நோக்கலாம்.

**பாட ஆசிரியர்**

பாட ஆசிரியர்களில் மாணவர்களுக்கு மேலதிக தகவல் தேவையில்லை எனக் கருதுபவர்களாக 77% இனரும், உசாத்துணை வழங்காத நிலையில் 75.3% இனரும், ஆசிரியர்கள் நூலகத்தை பயன்படுத்துவதற்கு நேரமில்லாத நிலையில் 93.8% இனரும், ஆசிரியர் வாசிப்புப் பழக்கத்தை தூண்டாத நிலையில் 91.7% இனரும் உள்ளனர். இதிலிருந்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு ஆசிரியர்களால் வழங்கப்படுகின்ற விரிவுரைகளும் குறிப்புக்களும் போதுமானது எனக் கருதுவதோடு ஆசிரியர்களும் வாசிப்புப் பழக்கத்தில் நாட்டமற்றவர்களாக இருப்பதனால் மாணவரின் வாசிப்புப் பழக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்காத தன்மையும் புலப்படுகின்றது.

**நிர்வாக ஒத்துழைப்பு**

நிர்வாக ஒத்துழைப்பு இல்லாத நிலையில் 81.3மு இனரும்இ நூலகத்தை வேறு தேவைக்குப் பயன்படுத்துகின்ற நிலையில் 75% மான நூலகங்களும்இ நூலகப் பாடவேளை ஒதுக்கப்படாத நிலையில் 96.7% மான நூலகங்களும்இ பாடம் நடைபெறாத போதும் நூலகப் பயன்பாடு இல்லாத நிலையில் 89% மான நூலகங்களும்இ நூலகப் பொறுப்பாசிரியரிடம் வேறு பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நிலையில் 62.5% இனரும் உள்ளனர். இந் நிலைமையானது பாடசாலை நூலகங்களில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு உரிய பாடவேளைகளை ஒதுக்கி வழங்காததோடு நூலகப் பௌதீகஇ மனித வளங்கள் விரயமாவதற்கும் பாடசாலை நிர்வாகமே காரணமாக அமைகின்றது.

**நூலகப் பொறுப்பாசிரியர்**

வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நடவடிக்கை இல்லாத நிலையில் 89.6% மான நூலகங்களும், வாசிப்பதற்கு நூலகப் பொறுப்பாசிரியரின் தூண்டலில்லாத நிலையில; 92.9% மான நூலகங்களும், நூலகப் பொறுப்பாசிரியரின் வாசிப்பதற்கான வழிகாட்டல் திருப்தி இல்லாத நிலையில் 94% மான நூலகங்களும், மாணவர் தேடலில் சுதந்திரம் இல்லாத நிலையில் 73.7% மான நூலகங்களும் உள்ளன. இங்கு நூலகப் பொறுப்பாசிரியர்களின் இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பல்வேறு தடைகளை ஏற்படுத்துகின்றது.

**பாடசாலை நூலகம்**

1. **நூலக ஒழுங்குபடுத்தல்:**

   பாடசாலை நூலக நூல்கள் பட்டியலாக்கம் செய்யப்படாத நிலையில் 100% மான நூலகங்களும், பகுப்பாக்கம் இல்லாத நிலையில் 87.5% மான நூலகங்களும் உள்ளன. இந் நிலையானது நூலகங்களில் மாணவர்களின் விரைவான தேடலுக்கு தடைகளை ஏற்படுத்தி மாணவர்களின் ஆர்வ நிலையையும் மந்த நிலைக்கு இட்டுச் செல்லும்.

2. **நூலக சேவைகள்:**

   இரவல் வழங்கும் சேவை இல்லாத நிலையில் 73.5% மான நூலகங்களும், உசாத்துணை சேவை இல்லாத நிலையில் 90.3% மான நூலகங்களும், தரவுத்தள சேவை இல்லாத நிலையில் 100% மான நூலகங்களும்இ போட்டோ பிரதி சேவை வசதி இல்லாத நிலையில் 94% மான நூலகங்களும், பாடசாலை நூலகச் சேவை பற்றிய மாணவர் அபிப்பிராயத்தில் திருப்தியில்லாத நிலையில் 81.9% மான நூலகங்களும் உள்ளன.

3. **நூலக வளக்கிடைப்பளவு:**

   நூலக வளக்கிடைப்பளவை நோக்கும் போது ஆளணி வளம் (நூலக உதவியாளர்) இல்லாத நிலையில் 93.8மு மான நூலகங்களும், வருடாந்த நிதி ஒதுக்கீடு ரூ4000 இனை விட குறைந்த நிலையில் 93.8% மான நூலகங்களும், நூல்வளம் (பொருத்தமான நூல்லிருப்பு) இல்லாத நிலையில் 93.8% மான நூலகங்களும், நூற்கொள்வனவில் ஆசிரியர் பங்களிப்பில் திருப்தியில்லாத நிலையில் 72.9% மான நூலகங்களும், இடவசதி இல்லாத நிலையில் 87.5% மான நூலகங்களும், நிரந்தரக் கட்டிட வசதியில்லாத நிலையில் 75% மான நூலகங்களும்இ ஏனைய வள வசதிகளை நோக்குகின்ற போது முதலுதவி, இணையம், கழிப்பறை, குடிநீர் வசதியில்லாத நிலையில் 100% மான நூலகங்களும், இருக்கை வசதியில்லாத நிலையில் 81.3% மான நூலகங்களும் உள்ளன. இதிலிருந்து பாடசாலை நூலகங்களில் பௌதீக, நிதி, ஆளணி போன்ற வளங்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளதைப் புலப்படுத்துகின்றது.

இவ்வாய்வானது பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழல் எவ்வகையான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதை இனங்காண உதவியாக இருந்ததோடு, இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் முன் வைப்பதற்கு உதவியது.

*முடிவுரை*

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் பாடசாலைச் சூழல் எவ்வகையான தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதை நோக்குகின்ற போது பாட ஆசிரியரானவர் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதில் அக்கறையில்லாத தன்மையும் பாடசாலை நிர்வாகம் ஒத்துழைக்காத தன்மையும் நூலகப் பொறுப்பாசிரியர் மாணவரின் சுதந்திரமான வாசிப்புக்கு வழிகாட்டாத தன்மையும் பாடசாலை நூலகச் சேவைகள் சீரற்ற நிலைமையிலும் காணப்படுவதோடு பாடசாலை நூலக மனித வள, பௌதீக வள கிடைப்பனவு பற்றாக்குறையான நிலைமையும் காணப்படுகின்ற நிலையில் பாடசாலைச் சூழல் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பாட ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மாற்றியமைக்கப்படுவதுடன் நூலகப் பொறுப்பாசிரியர்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக மாற்றுவதற்கு ஏற்ற வகையில் பயிற்சிகள், ஊக்கப்படுத்தல்கள் வழங்கப்படுவதுடன் பாடசாலை நிர்வாகம் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி மாணவர்களின் நூலகப் பாடவேளைப் பயன்பாட்டை அதிகரிக்கத்தக்க வகையில் வளங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இப் பிரச்சினையை ஓரளவு குறைக்க முடியும்.

**REFERENCES**

Kamalanathan, T, (Ed), (2005), paper on Library and Information Science, Jaffna , Jaffna National College of Education.

Langley, A , Gray, E and Vaughan, K, (2005), The Role of the Academic Librarian, U.K, Chandos Publishing ( Oxford ) Ltd, U.K.

Walsh, Mark, (2001), Research made real : A guide for student, U.K, Nelson Thornes Ltd, U.K.

Kularatne, N, G, (1991), Educational policy and research in Sri Lanka, National Institute of Educations, Maharagama.

Education perspectives, (2013), The B1 – Annual Journal of the Research & Development Branch Ministry of Education, Sri Lanka.

Education perspectives, (2014), The B1 – Annual Journal of the Research & Development Branch Ministry of Education, Sri Lanka.

Educationalist Research Journal,(2016) October, Vol 5 , Educational publication centre, Jaffna, Sri Lanka.

National Library and Documentation Service Board (2014), Readership Survey of Scholl Children in Sri Lanka, Colombo. Sri Lanka : National Library and Documentation Services Board.

Gobalasuthanthiran, K, Sivarajasundaram, R, Surenthirakumaran, R, and Chandrasekar, K, (2016), Infulence of Socio – Economics, Educational Status of School Children on their information seeking behavior and School Library usage. Sri Lanka Library Review, Sri Lanka Library Association (SLLA), Colombo, Sri Lanka, Vol 30.

*தமிழ் மொழி மூலம்*

அலியார், யூ, எஸ், (1995), கல்வியியல் நோக்கு, கொழும்பு, பைத்துல்ஹிக்மா , கொழும்பு.

அருளானந்தம், ஸ்ரீ,(2007), நூலக விழிப்புணர்வு நிறுவகம், பாடசாலை நூலக அபிவிருத்திக் கருத்தரங்குக் கையேடு - 1, பாடசாலை நூலக அபிவிருத்தி, வலிகாமம் கல்வி வலயம், யாழ்ப்பாணம்.

அருளானந்தம், ஸ்ரீ (Ed),(2005), இணுவில் அறிவாலயம் திறப்பு விழாச் சிறப்பு மலர், இணுவில் திருவூர் ஒன்றியம்.

கமால்தீன், எஸ், எம்,(1992) நூலும் நூலகமும், யாழ்ப்பாணம், அயோத்தி நூலக சேவை, யாழ்ப்பாணம்.

கமால்தீன், எஸ், எம்,(2003), பாடசாலை நூலகம்: ஓர் அறிமுகம், கொழும்பு, குமரன் புத்தக இல்லம் , கொழும்பு.

கிருஸ்ணகுமார் இ,(1995), களிமண் பதிவுகள் முதல் கணனிப் பதிவுகள் வரை, யாழ்ப்பாணம், அகிலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

ஜமதிலி, வி,(2004), நூலகமும் சமூகமும், யாழ்ப்பாணம், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

சின்னத்தம்பி, க,(2007), கல்வி ஆய்வியல், யாழ்ப்பாணம், ஜெயா இன்டர் நெசனல், கொழும்பு.

விக்கிரமசிங்க, வை.எம்,(2004), சமூக விஞ்ஞான ஆய்வுகள் : சமூக விஞ்ஞானத்துறை சார்ந்தவர்களுக்கும் கல்வியியல் ஆய்வுகள் முதலான பாடங்களில் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கமான வழிகாட்டி, கொழும்பு, இலங்கை இராஜரட்டை பல்கலைக்கழகம், கொழும்பு.

இரத்தின பால நந்தசேன,(1995), சமூக விஞ்ஞான ஆய்வடிப்படைகள், கொழும்பு, அரலிய வெளியீட்டகம், இலங்கை.

சின்னத்தம்பி, க,(2003), கல்வியில் அளவீடும் மதிப்பீடும்,Jeya International (Pvt) Ltd, கொழும்பு.

ஜெயராசா, சபா, (2006), ஆய்வு முறையியல், இலங்கை, யாழ்ப்பாணம், கல்வியியல் ஆய்வுக் கழக வெளியீடு.

கல்வி அமைச்சு (2010), பாடசாலை கல்விச் செயற்பாட்டில் பண்பு சார் விருத்தி 111, முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாட்டு அலகு, இலங்கை.

கல்விச் சேவைகள் அமைச்சு, (2013), பாடசாலை நூலக மற்றும் கற்றல் வள நிலையத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டி, பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவு, இசுறுபாய, பத்திரமுல்ல.